BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

அக இலக்கியங்கள் காட்டும் குருவிகளும் அதன் வாழ்வியல் சூழலும்
Sparrows and their habitats depicted in the literature

முனைவர் இ. சகாய மேரி

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி - 627008.

Dr.I.Sahaya Mary

Associate Professor, Department Of Tamil, Rani Anna Government College for Women, Tirunelveli, Tamilnadu,

E.mail: Sahapackiaraj21@Gmail.Com Mobile No: 9442009355

Abstract

The extinction of species, especially sparrows, has increased due to growing scientific changes. Due to technological advancements, they have moved their habitats to many places and are unable to increase their population due to a lack of reproduction.

Many birds are facing extinction based on their species and food. Birds that live with nature face the extinction of their species when the natural environment of their species when the natural environment is affected. This article is based on the objective that humans should protect nature, as an example of how birds that depend on the natural environment to increase their reproduction are changing from that state, due to climate change caused by human destruction of nature and the lack of a close relationship between humans and nature.

Key words: Ecology - sparrow - Rain bird - The village sparrow - sleeping sparrow - Refuge sparrow - House sparrow - Bullerici - Palm tree - thornbush - Curve

முன்னுரை

மனித சமூகத்தின் அன்றாட வாழ்வியலோடு தொடர்புடையவை பறவைகள். பறவைகளின் இயக்கங்களை வைத்து அன்றைய மனிதர்கள் தங்கள் வாழ்வியலில் சில நிகழ்வுகளை அறிந்திருந்தனர். இச்சூழலில் உயிர்கள் சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சங்க கால மக்கள் இயற்கையைப் பாதுகாப்பதில் தாவரங்கள் மற்றும் உயிரினங்களுக்குச் சுற்றுச்சூழலால் தீங்கு ஏற்படாதவாறு வாழ்ந்தனர். உயிரினங்கள் வாழ்க்கை முறை பறவைகளின் வாழ்வியல் முறைக்குச் சூழலியல் சிறப்பான பங்காற்றுகின்றது. இயற்கையோடு சார்ந்த பறவைகளின் வாழ்வியல் சூழலியலோடு தொடர்புடையது. எனவே இயற்கையோடு சார்ந்த பறவைகளின் வாழ்வியல் சூழலை இக்கட்டுரை ஆராய்கின்றது.

நோக்கம்

வளர்ந்து வரும் அறிவியல் மாற்றங்களினால் உயிரினங்கள் அழிவது அதிகரித்துள்ளன முக்கியமாகக் குருவிகள் என்று தொழில்நுட்ப வளர்ச்சியினால் பல இடங்களுக்குத் தங்கள் இருப்பிடத்தை மாற்றிச் சென்று இனப்பெருக்கம் இன்மையினால் தங்கள் இனங்களின் பெருக்கத்தினைப் பெருக்க முடியாமல் பறவைகள் இன அடிப்படையிலும் உணவின் அடிப்படையிலும் பல அழிவுகளைச் சந்தித்து வருகின்றன.

இயற்கையோடு வாழும் பறவைகள் இயற்கை சூழலில் பாதிப்பு ஏற்படுகின்ற பொழுது தங்கள் இனத்தின் அழிவினை சந்திக்கின்றன. மனிதன் இயற்கையை அழிப்பதால் ஏற்படும் காலநிலை மாறுபாடும் மனிதன் இயற்கையோடு உயிரினங்களோடு நெருங்கிய தொடர்பு இல்லாத ஒரு காரணமும் இயற்கைச் சூழல்களில் தங்கி தன்

இனப்பெருக்கத்தைப் பெருக்கும் பறவைகள் என்று அந்த நிலையில் நின்று மாறுபட்டு வருவதை எடுத்துக்காட்டும் விதமாக மனிதன் இயற்கையை பேண வேண்டும் என்ற நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது

சூழலியல்

'ECOLOGY' என்ற ஆங்கிலச் சொல் தமிழில் சூழலியல் என்று அழைக்கப்படுகின்றது. சூழலியல் என்பது உயிர் வாழ்க்கையின் பரவலாகும். விலங்குகள் பறவைகள் தாவரங்கள் இவற்றின் உயிர் வாழ்க்கைக்கு இடையே உள்ள தொடர்பு குறித்து ஆராய்வது சூழலியல் என்று சொல்லலாம். உயிர்கள் அனைத்தும் இயற்கை சூழலை சார்ந்தே இருப்பதாலும், இடம் சுற்றுப்புறம் ஆகியவற்றைச் சார்ந்து வாழும் உயிரினங்களின் சூழல் அமைப்பினை பற்றி விளக்குவது சூழலியல் எனலாம்.

என்று குறிப்பிடுகின்றது. இதனைத் தொடர்ந்து பண்டைய தமிழர்களின் சூழலியல் சார்பை விழிப்புணர்வை அக இலக்கியங்கள் வழி காணலாம்.

க்ரியா தற்காலத்தமிழ் அகராதியில் சூழல் பற்றிய கருத்தானது 'மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியன தங்களுக்குள் சுற்றுச்சூழலுடன் கொண்டிருக்கும் தொடர்பைக் குறித்த அறிவியல் துறையாகும்1 என்று குறிப்பிடுகின்றது. இதனைத் தொடர்ந்து பண்டைய தமிழர்களின் சூழலியல் சார்வை விழிப்புணர்வை அக இலக்கிங்கள் வழி காணலாம்.

சிட்டுக்குருவி

குரீஇ என்பது சிறு பறவைகளின் பொதுப்பெயர். குரீஇ சிறிய என்று பொருள்படும். இவை குரீஇ, குருகி, குருவி என வழங்கப்பட்டுள்ளன. இது உருவத்தால் வேறுபட்டவை. இவை மனையில் கூடுகட்டி வாழ்வதால் மனையுறைக்குருவி என்று பெயர் பெற்றவை. தற்பொழுது சிட்டுக்குருவி, ஊர்க்குருவி, அடைக்கலங்குருவி என்று பெயர் உண்டு. எட்டுத்தொகையில் மனையுறைக் குருவி 'ஐந்து' இடங்களில் வருகின்றன. ஐந்திணைகளில் 'குருவி' என்ற பொதுப்பெயருடன் காணப்படுகின்றன.

மனையுறைக்குருவி வீட்டிலும், வீட்டின் அருகிலும் வாழ்கின்றன. வீட்டில் இப்பறவைக்கென்று தானியங்கள், தாழ்வாரங்களில் கட்டித் தொங்க விடப்படுகின்றன. கூட்டினைப் பற்றியும், முட்டை, குஞ்சுகள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இப்பறவை உலகில் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. 'உள்இறைக் குரீஇக்கார் அணற் சேவல்' (நற்றிணை பாடல். 181) என்றும், 'மனையுறை குரீஇக் கறையணற் சேவல்' (புறநானூறு பாடல். 318) என்றும் குறிப்பிட்டுள்ளன.

பொதுவாக இப்பறவை இனப்பெருக்கக் காலத்தில் ஆண்பறவை, பெண்பறவை இரண்டும் சேர்ந்தே அடைகாக்கின்றன. இவை முட்டையிடும் காலத்தில் மட்டுமே தன்கூட்டை அமைக்கின்றன. இக்கூட்டை இரண்டு பறவைகள் சேர்ந்தே கட்டுகின்றன. மற்ற காலங்களில் தனித்தே வாழ்கின்றன. மற்ற பறவைகளைக் காட்டிலும் இப்பறவைக்குத் தனித்த குணாதிசயங்கள் உண்டு. தன்துணையினை விட்டு வேறொரு பறவையுடன் தங்கியிருந்தால் மறுநாள் தன்துணையைத் தேடி வரும் ஆண்பறவையைச் சேர்க்காது. இதனை 'சேவல் பிற பறவையுடன் தங்கி இருந்தாலும் இதனைத் தன் கூட்டில் சேர்க்காது. மழை வந்தாலும் சேர்க்காது. பிறகு சற்றே நெடிய நேரம் கழித்து உள்ளே அழைக்கின்றன"2 என்று கூறுவார்.

குருவியின் அன்பு

ஆண்குருவியொன்று தன் பெண்குருவியானது கருவுற்ற காலத்தில் தன் முட்டைகளுடன் அடைகாக்கும். பெண்குருவிக்கு அழகிய மெத்தையொன்றினை இருக்கும்படி வைக்க அருகில் உள்ள கரும்புத் தோட்டத்தில் பூத்திருக்கும் மென்மையான வெண்பூவைக் கொழுதி கொண்டுவரும். முட்டையிட்ட பிறகு அப்பொழுது ஆண்குருவியும் சேர்ந்து அடைகாக்கும் பணியினைச் செய்கின்றன. இதனைப் பெண்கள் கருவுற்று இருக்கும் பொழுது தன்கணவனுடன் சேர்ந்து பாதுகாப்பதைப் போன்று என்று புலவர் வர்ணித்துள்ளதை அறிய முடிகின்றது. இதனை,

'உள்ளூர்க் குரீஇக் துள்ளுநடைச் சேவல்
சூல் முதிர் பேடைக்குஈனில் இழைஇயர்
தேம் பொதிக் கொண்ட தீம் கழைக் கரும்பின்
நூறா வெண் பூ கொழுதும்" (குறுந்தொகை - 85)

என்ற இப்பாடலின் மூலம் அறிய முடிகிறது.

மலைக்குருவி

மலையிலே வாழும் அரியவகைக் குருவியாகும். இக்குருவி எட்டுத்தொகையில் 'ஏழு' இடங்களில் வருகின்றன. இதனைக் 'குன்றத் திறத்த குரீஇ இனம்போல' புறநானூற்று பாடல் 19இல் குறிப்பிட்டுள்ளன. இப்பறவையினை கருப்புவரையன் சிட்டு, கருடவரிச்சிட்டு, ஆழ்வார்சிட்டு என்றெல்லாம் அழைப்பர். மலைக்குருவிகள் உணவுத்தேடச் செல்லுகையில் கூட்டம் கூட்டமாகச் சென்று இரையைத் தேடுகின்றன. அவ்வாறு செல்லும் பொழுது சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்டவையாகவே செல்கின்றன. இக்காட்சியினை 'கிளையமல் குரீவி (ச.புள் ப.273) என்று அழைப்பர். இவை தினைகளையும், புல்லரிசி தானியங்களையும் விரும்பி உண்ணுகின்றன. கூட்டமாகச் சென்று தினைக்கதிர்களையும் கவர்ந்து வருகின்றன. சங்க இலக்கியங்களில் தினைக்கவரும் குருவியாகக் கூறப்பட்டவை, நெல்லினைக் கவரும் பறவையாகக் கூறப்பட்டவை 'முனியாக்குருவிகள்' என்னும் மலைக்குருவி ஆகும். இப்பறவை குறிஞ்சிநிலத்தில் வாழும் பறவையாகும்.

தூக்கணாங்குருவி

முதுக்குறைக் குருவி என்பது தூக்கணாங் குருவியாகும். 'தூக்கு+ கணம்+ குருவி = தூக்கணாங்குருவி என்று அதன் கூட்டினால் பெயர் பெற்றது. தூக்கு - தொங்குதல் - தொங்கவிடுதல். குணம் - கூடு. கூட்டினைத் தொங்கவிடும் குருவி என்ற பெயர் பெற்றன. எட்டுத்தொகையில் மூன்று இடங்களில் வருகின்றன. இப்பறவை பனைமரங்கள், ஈச்சமரங்கள், முட்புதர்கள் ஆகிய இடங்களில் கூடுகட்டி வாழ்கின்றன. இப்பறவை கூடுகட்டும் இடங்களை நற்றிணையில் மூங்கில் கிளையிலும், குறுந்தொகையில் பனைமரங்களிலும் கூடுகட்டுவதை எடுத்துரைக்கின்றன. இப்பறவையின் கூட்டினை வைத்தே முதுகுறைக் குருவி என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதனை,

'முடங்கல் இறைய தூங்கணங் குரீஇ

(குறுந்தொகை - 374)

வளைவையுடைய சிறகையுடைனவாகிய தூக்கணாங்குருவி உயர்ந்த பெரிய பனையினிடத்தே அமைத்த கூடு என்பதைக் குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது.

பொதுவாக இக்கூடானது தொங்கும் குழாய் போன்று காணப்படும். மக்கள் இக்கூட்டை "தூக்கணத்தான்" என்று அழைப்பர். இப்பறவையை 'நெசவாளன்' என்றும் அழைப்பர். ஒவ்வொரு ஆணும் இரண்டு முதல் ஐந்து பெண்பறவையைக் கவர்ந்து தன்னுடன் இணை சேருவதற்காக ஆண்பறவை இவ்வாறு செய்கின்றன. வேறொரு ஆண்பறவையைத் தேடிச் செல்லும். இவை பெரும்பாலும் கார்காலத்தில் மட்டுமே கூட்டினை அமைத்து இனப்பெருக்கம் செய்கின்றன.

ஆளைக்காட்டிக் கொடுக்கும் குருவிகள்

பறவைகள் பலவிதம் உண்டு. இவை அபாயகாலத்தில் காத்துக் கொள்ளவும், பிற உயிரினங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் உதவுகின்றன. பெரும்பாலும் காடுகளில் உள்ள விலங்குகளை ஆபத்தில் இருந்த பாதுகாத்துக் கொள்ள முன்னெச்சரிக்கை செய்கின்றன. கருங்குருவிகள் இச்செயலினைச் செய்கின்றன. இதில், சிங்கம், புலி போன்ற கொடிய விலங்குகளில் இருந்து மான்களுக்கு எச்சரிக்கை ஒலியினைச் செய்து காக்கின்றன. கொடிய விலங்குகள் வரும்பொழுதும் பறவைகள் தொடர்ந்து அபயக்குரலில் குரலொலித்துக் கொண்டு எச்சரிக்கை செய்கின்றன. கருவாட்டுவால் குருவிகள், கழுகுகள், காகம் போன்ற பறவைகள் தன் கூட்டினை நெருங்காதவாறு விரட்டியடிக்கின்றன.

உள்ளான் நரிகள் மற்றும் பாம்புகளைக் கண்டால் உரத்தக்குரலில் ஒலியினை எழுப்பித் தன் கூட்டைவிட்டுத் திசைத் திருப்புகின்றன. ஆள்காட்டிகள் மனிதர்களைக் கண்டால் அபயக்குரலில் ஒலியினை எழுப்பிக் காட்டிக் கொடுக்கின்றன. இந்த ஆள்காட்டிகள் எட்டுத்தொகையில் மனிதர்களைக் கண்டால் எவ்வாறு ஒலியெழுப்பி மனிதனை மற்ற உயிரினங்களுக்கு முன்னெச்சரிக்கை செய்கின்றன என்பதையும் குறிப்படுகின்றன. குறுந்தொகையில் வேட்டுவன் இடம் பறவையினைப் பிடிக்க வலையை வீசியுள்ளதை அறிந்து தெள்ளிய அழைப்புக் குரலின் மூலம் அறிவித்துள்ளதை குறிப்பிட்டுள்ளன. மேலும் வழிப்போக்கர்களுக்குத் திருடர்கள் பதுங்கியிருப்பதைக் குரலொலிகள் மூலம் அறிவிப்பதையும் குறிப்பிட்டுள்ளன.

முடிவுரை

சுற்றுப்புறத்தில் ஏற்படும் காற்று மாசுபாட்டினால் பறவைகளின் எண்ணிக்கை குறைகின்றன. அவற்றில் இன்றைய சூழலில் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது என்றே கூறலாம். சூழல் மாறுபாட்டினால் குருவிகளின் இனப்பெருக்கம் பாதிப்படைந்துள்ளது. காலநிலை மாற்றத்தினால் உலகில் பெரும்பாலான பகுதிகளில் வாழும் குருவிகள் பலவிதப் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருக்கின்றன. பெரும்பாலானவையின் இனப்பெருக்கம் பாதிக்கப்படுகின்றனது. முட்டைகளின் தோல் கடினத்தன்மையை இழந்து குஞ்சுகள் பொறிக்கும் விழுக்காடும் தற்காலச் சூழலில் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது உள்ள வெப்பநிலை மாறுபாட்டால் பல வெளிநாட்டுப் பறவை இனங்களும் இனப்பெருக்க அளவில் குறைந்துள்ளன என்றே கூறலாம். கூடுகட்டி வாழும் பறவைகளில் தூக்கணாங்குருவி முக்கிய இடம் பெறுகின்றன. இக்குருவி இனத்தின் இனப்பெருக்கம் பெருமளவு குறைந்துவிட்டது என ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

மனிதனால் மரங்கள் வெட்டப்பட்டு இயற்கையை அழிப்பதே இவ்வினத்தின் பெருக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது என்று கூறலாம். நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்வியலின் தேவைகளை அறிந்த கொள்ளப் பறவைகள் முக்கியப் பங்கு வைக்கின்றன. நேரங்களைக் கணக்கிடுதல், அறிவித்தல், பொழுது விடியலை மக்களுக்கு அறியச் செய்தல் தீய சக்திகளை அறிந்து முன் எச்சரிக்கையாக ஒலி எழுப்புவது போன்ற செயல்கள் இன்று அருகி உள்ளன. பழங்கால மக்கள் சூழலியலுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். நீர் நிலைகளைப் பாதுகாத்தல் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்தல் இயற்கையைப் பேணுதல் போன்ற சுற்றுச்சூழல் செயல்களில் ஈடுபட்டனர். இதனால், சுற்றுச்சூழல் மாசுபாடு இன்றித் தூய்மையாக இருந்தது. இதனால், பறவைகளும் விலங்குகளும் தாவரங்களும் எவ்விதப் பாதிப்பும் இன்றி வளர்ந்தன. இந்நிலை இன்றைய சூழலில் மாறுபட்டுள்ளது. எனவே உயிரினங்களைப் பாதுகாக்க சுற்றுச்சூழலை மிகுந்த அக்கறையோடு பேணுவோம்.

துணைநூற் பட்டியல்

சாமி, பி.எல்., சங்க இலக்கியத்தில் புள்ளின் விளக்கம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 15

நாகராசன், முனைவர் வி. குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை - 98

பாலசுப்பிரமணியன், முனைவர் வே., முனைவர் விஸ்வநாதன், முனைவர் பி. நாகராசன், புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை - 98

வள்ளியப்பன், ஆதி., சிட்டுக்குருவியின் வாழ்வும் வீழ்ச்சியும், ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை- 14

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.